www.padippakam.com

# விடுதலைப்பாதை

2016 பாதை.1 மீனம் March பயணம்.5 1986

## விடுதலைப் பாதையின் உள்ளே.


★ எமது பார்வையில்

★ இன்றைய வரலாற்றின் திருப்புமுனையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் மாற்றமடையுமா?

★ விடுதலையைத் தேடி?

★ பெரு நாட்டு விடுதலைப் போராட்டம்.

★ ஓர் இதயத்தின் ஏக்கக் குரல்.


★ புத்துலகம் கண்டிடுவோம்.

★ தமிழீழ மாணவர் பேரவையின் எதிர்ப்புப் போராட்டம்

★ கரையைத் தேடும் ஓடங்கள்

★ தமிழீழச் செய்திகள்

★ குரல்கள்! குரல்கள்! குரல்கள்!

விடியலைத் தேடும் மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



# எமது பார்வையில்

இன்றைய எமது விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட விளைவுகளை யதார்த்த பூர்வமாக அணுகுவோமாயின் எமது மக்கள் படிப்படியாக முற்றாக அழியும் நிலையையும் எமது பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இவை மட்டுமல்லாமல் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து இன்றுவரை ஓரளவிற்கு போராட்ட முனைப்பு கூடிய பிரதேசமாகவும் விடுதலைப் போராளிகளின் பாதுகாப்பு அரணாகவும் தளப்பிரதேசமாகவும் இருந்த யாழ்ப்பாணப் பிரதேசம் இன்று எதிரியின் அரணாக மாறிவருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமன்றி பிரகடனப்படுத்தப்படாத இராணுவ ஆட்சி ஸ்ரீலங்கா பாசிச அரசினால் வடக்கு பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எமது விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியத்தை உணராமல் இதே மாதிரியான தாக்குதல்கள் இன்று வேறு மாவட்டங்களில் நடக்கின்றன. இவற்றிற்கு அரசாங்கம் கண்டும் காணாது சில நடவடிக்கைகளிற்கு விட்டுக் கொடுக்கிறது பின்பு மூர்க்கத்தனமாக அப்பாவி மக்களை அழித்தொழிக்கின்றது அது மாத்திரமன்றி அப்பிரதேசங்களில் பயங்கரவாதிகள் உள்ளார்கள் என்றும் அவர்கள் அப்பாவி மக்களை துன்புறுத்துகிறார்கள் என்றும் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறோம், ஜனநாயகத்தை காப்பாற்றுகின்றோம் என்றும் போர்வையில் நவீனகரமான ஆயுதங்களுடன் ராணுவத்தையும் குண்டர்படைகளையும் குவித்து இராணுவ மேலாதிக்கத்தைச் செலுத்துகின்றார்கள். இந்நிலையில் அப்பிரதேசத்தில் இருக்கும் அப்பாவித் தமிழ்மக்கள் இராணுவத்தினதும் குண்டர் படைகளினதும் அட்டகாசம் தாங்க முடியாது, அகதிகளாக வெளியேறுகிறார்கள். ஆகவே இத்தாக்குதல்களை மேற்கொள்ளும் விடுதலை இயக்கங்கள் பிரதேசங்களை மீட்கக் கூடிய போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவரை எமது பிரதேசங்களை நாம் மீட்க முடியாது. மாறாக அன்றைய செவ்விந்தியரைப் போல் அல்லது இன்றைய பாலஸ்தீனரைப் போல். அல்லது பிலிப்பைன்சுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இடையில் இருக்கும் தீமோர் இனத்தைப் போல் நாளைய தமிழ் மக்கள் பிரதேசங்களை இழந்து அந்நிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்து இழிவான தொரு வாழ்க்கையை வாழ வேண்டிய நிலை உருவாகும். இப்படியான போர்த் தந்திரங்களை, அதாவது போராளிகளை சிறு சிறு தாக்குதல்களை செய்ய விட்டுக்கொடுத்துப் பின் ஆயிரக்கணக்கில் அப்பாவிப் பொது மக்களை அழிக்கும் நிலையை உருவாக்கி விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையில் பாரிய பாலத்தைப் போட்டு மக்களையும் போராளிகளையும் வேறுபடுத்தி புரட்சிகர விடுதலைப் போராட்டங்களை நசுக்கும் ஆலோசனை வழங்கும் ஏகாதிபத்திய பிற்போக்குவாத சியோனிஸ முதலாளித்துவ அரசுகள் தான் இன்று இவ்வாறு ஸ்ரீலங்கா அரசுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகின்றன.

ஆகவே இன்றைய எமது தேசிய இன விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமாகப் பரிணமித்து உலக முற்போக்கு சோஷலிச நாடுகளின் கவனத்தை எம்பக்கம் திருப்புவதன் மூலமும் எமது புவியல் அமைப்புக்கேற்பவும், மக்களின் மனோநிலைக்கேற்பவும், மேலும் இதுவரை காலமும் நடைபெற்ற சிறு சிறு தாக்குதல்களால் ஏற்பட்ட விளைவுகளை உணர்ந்து இன்றைய நிலை கருதி பரந்துபட்ட மக்களின் போராட்டத்தை நடத்துவதன் மூலமும் தான் பறிபோய்க் கொண்டிருக்கும் எமது பிரதேசங்களை மீட்டு ஒரு சோஷலிச அரசை உருவாக்க முடியும்

இன்று தேசிய இனவிடுதலைப்போராட்டம் கூர்மைப் பட்டிருந்தாலும் கூடவே வர்க்கப் போராட்டத்திற்குரிய தன்மைகளும் வளர்ந்து வருகின்றது.

* அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் முழுமையானவிடுதலையே எமது நோக்கு.

படிப்பகம்

www.padippakam.com



# இன்றைய வரலாற்றின் திருப்புமுனையில் தமிழீழ விடுதலைப்போராட்டம் மாற்றமடையுமா?

ஸ்ரீலங்கா இனவாத பாசிச முதலாளித்துவ அரசாலும் சீர்திருத்தத்தை நாடும் தமிழ் முதலாளித்துவத் தலைமைகளாலும் தமிழ் மக்கள் எந்தெந்த ரீதியில் ஒடுக்கப்பட்டுள்ளார்கள் என்று பார்ப்போமாயின் மாணவர் சமுதாயம் தரப்படுத்தலாலும், அரசின் திட்டமிட்ட தாராள இறக்குமதியால் விவசாயிகளும், தொழிற் சங்கங்களின் ஒடுக்குமுறையால் தொழிலாளர்களும், கிராமிய தொழில் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்காதபடியால் கிராமிய தொழிலாளர்களான பாட்டாளி மக்களும், ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து சிங்கள பேரினவாத அரசால் திட்டமிட்டுத் தமிழ்த் தேசிய இனத்தை அழிக்கும் நடவடிக்கைகளே இன்றுவரை மேற்கொள்ளப்பட்டது, மேற்கொள்ளப்படுகின்றது. இவைமட்டுமல்லாமல் தமிழ் தலைமைகளும் முதலாளித்துவ நோக்குடனேயே சிங்கள முதலாளித்துவ அரசுக்கு சார்பாகவும் நமது வர்க்க நலனைப் பாதுகாக்கவும் இனவாதத்தில் தான் ஒட்டுமொத்தமான பிரச்சனைக்கு ஒரே வழி சமுதாய மாற்றமேயன்றி, சீர்திருத்த வாதங்களல்ல என்பதை அவர்கள் இன்று வரை கருதியதுமில்லை. முதலாளித்துவ சிந்தனையில் இருந்தும் அவர்களின் வர்க்க நலன்களில் இருந்தும் விடுபடவுமில்லை. இவர்களின் ஸ்திரமற்ற கொள்கைகளையும் சந்தர்ப்ப வாதப் போக்குகளையும் உணர்ந்த மக்கள் மார்க்சின் "மாறுதல் என்பதில் மாற்றமேயில்லை" என்ற கருத்துப்படி தமது தலைவிதியைத் தமது சொந்தக்கரங்களில் எடுத்தார்கள். முக்கியமான இந்தக்காலகட்டத்தில் தான் இளைஞர் சமுதாயத்தின் எழுச்சியும் விடுதலை இயக்கங்களின் தோன்றல்களும் உருவாகின.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயுத மேந்திய விடுதலை இயக்கங்களின் இன்றைய நிலைப்பாடு கருதியும் தொலை நோக்குடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அணுக வேண்டிய வரலாற்று கட்டாயத்திற்கு வர வேண்டும். காரணம் எமது வரலாற்று திருப்புமுனையும் எமது மக்களின் மனோ நிலைக்கும் எமது புவியியல் அமைப்புக்கும் ஏற்பவே போராட்டத்தை அணுக வேண்டுமேயன்றி இயக்கங்கள் தங்களுக்கு கிடைக்கும் இராணுவ வெற்றியை மாத்திரம் நோக்காது மக்களின் புரட்சிகர சிந்தனைகளையும் போராட்ட உணர்வுகளையும் மதித்து அதனூடாகப் பக்குவமான ஓர் தொடர்ச்சியான மக்கள் போராட்டத்திற்கு மக்களை வென்றெடுக்காமல் அவர்களைத் தொடர்ந்தும் பார்வையாளர் வரிசையில் நிறுத்துவோமானால், நாம் இன்று கண்கூடாகப் பார்க்கும் ஓரடி நிலமின்றி அந்நிய நாடுகளில் அகதிகளாக தமது கலாச்சார சீரழிவுடன் வாழும் பாலஸ்தீன மக்களைப் போல் அது மாத்திரமன்றி அமெரிக்காவின் அன்றைய பூர்வீககுடிகளாக ஒரு தேசிய இனத்திற்கு இருக்கக்கூடிய சகல உரிமைகளுடனும் வாழ்ந்த செவ்விந்தியர்கள் என்ற தேசிய இனம் அழிக்கப்பட்டதையும், எமது விடுதலை இயக்கங்கள் ஒரு பாடமாக எடுக்க வேண்டுமேயன்றி அவற்றை முற்று முழுதாக மறுதலித்துவிட முடியாது. திட்டமிட்டு மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் போராட்டத்தைச் செய்வதாலும் மூல உபாயம் தந்திரோபாயத்தை பாவித்து போராட்டம் நடைபெறும் அந்தந்த நாட்டின் புவியியலமைப்பிற்கேற்பவும் எதிரியின் அக,புற முரண்பாடுகளுக்கு ஏற்பவும் செய்யும் தாக்குதல்கள் எமக்கு சாதகமான விளைவையும் எதிரிக்கு பாதகமான விளைவையும் தரவேண்டுமேயன்றி, விடுதலைப் போராளிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் எதிரிக்கு சாதகமான விளைவையும், மக்களுக்கு பாதகமான விளைவையும், தருமானால். அப்போராட்ட வழிமுறையை மாற்றி மக்களை போராட்டத்தில் இணைத்து மக்கள் போராட்டத்தை நடத்துவதன் மூலம் தான் ஒரு புரட்சிகரமான நாட்டை உருவாக்க முடியும். தொடர்ச்சியான மக்கள் போராட்டத்தின் மூலம் உருவாகிய புரட்சிகரமான நாடுகளான ரஷியா, சீனா, வியட்நாம், கியூபா, நிக்கரகுவா போன்ற நாடுகளும் இன்று போராடிக் கொண்டிருக்கும் பாலஸ்தீனம், எல்சல்வடோர், பேரு நாடுகளின் போராட்டங்களில் மக்களின் போராட்டப் பங்குகளையும் விடுதலைப் போராளிகள் உணர்ந்து, எமது பிரதேசங்களை பறிகொடுத்தும், எமது மக்களை அகதிகளாக்கும் இத் தாக்குதல்களை மாற்றி மக்களை தங்களைப் பாதுகாத்து இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை அவர்களே தங்கள் பிரதேசத்தில் மேற்கொள்ளும் நிலை உருவாகாமல், விடுதலை இயக்கங்களால் நடைபெறும் இத் தாக்குதல்கள் தொடருமானால் இலங்கையில் தமிழ் தேசிய இனம் இருந்ததாக

படிப்பகம்

www.padippakam.com



வரலாறு இல்லாமல் போகுமா என்று எதிர்பார்க்கப்படும் ஐயப்பாடு தோன்றுகிறது. அது மாத்திரமின்றி இப்படியான நிலைப்பாடுகளும் எதிரியின் நெருக்குவாரமும் கூடக்கூட மக்கள் முற்றுமுழுதாக பிரதேசத்தை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்படுவார்கள். இதைவிட பாரதூரமான விளைவை விடுதலை இயக்கங்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகும். காரணம் இன்று நடைபெறும் தாக்குதல்களால் பிரதேசங்கள் மீட்கப்படவில்லையென்றும் எமக்கு ஒரு விமோசனமுமில்லையென்றும் ஏமாற்றமடைந்த மக்கள் தங்களையறியாமல் திரும்பவும் முதலாளித்துவ பிற்போக்குவாத தலைமைகளுக்கு பலியாடுகளாக அணிதிரளும் நிலை உருவாகலாம். ஆகவே நாம் ஆயுதத்தை ஏந்தி விட்டோம் எங்களால் தான் இந்தநிலை மாறும் என்ற நிலை மாறி அரசியல் தீர்க்கதரிசனத்துடன் சர்வதேச மக்களின் அனுதாபத்தையும் சர்வதேசரீதியில் எங்கள் போராட்டத்தை அங்கீகரிக்கும் வேலைத்திட்டங்களையும் எதிரிக்கு எதிரியார் என்பதையும் நாம் இனங்கண்டு அவர்களை வென்றெடுத்து பிராந்தியவில் உள்ள முற்போக்கு சக்திகளையும் இனம் கண்டு அவர்களையும் எமது போராட்டத்தில் மனிதாபிமான ரீதியில் அணுகும் நிலையை உருவாக்கி திட்டமிட்டு மக்களுக்கு நம்பிக்கை கொடுத்து பிரதேசங்களை மீட்கக்கூடிய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"மக்களே வரலாற்றை படைப்பவர்கள்."

-பரம்-

# விடுதலையைத் தேடி (2)

மல்லிகைப்
பந்தரைத் தடவி
வயல்பரப்பெல்லாம்
முத்தமிட்ட
வசந்த நிலா
துளிர் விடும்
அந்தத்தேசத்தின்

சிதறிக் கிடந்த
அந்தப் பசுமையான
தரைகளெல்லாம்
தமிழீழப்பிரசவத்துக்காய்
காத்துக் கிடக்கையில்

வரலாற்றுப் பக்கங்களில்
இனவாதக் கருக்களை
வர்ணந் தீட்டி
செப்பனிட்டு
உலகத்திற்கு வாசித்துக்
காட்டியபடியே
சுகப்பட்டு கொண்டிருந்த
ஏகாதிபத்திய அரசு

தாரகைத் தடாகமாய்
மிளிர்ந்த
தமிழீழ அரண்களை
குறிவைத்த
தளத்த
குண்டுகள்

சிறப்பத் தெருக்களையெல்லாம்
சிதைத்த போதும்
சிந்தனைத்துளிர் விடும்
இதயங்களையெல்லாம்
துளைத்துக் குருதியைக்
குடித்த போதும்
கருவினில் விளைந்த
சிசுவைப் பாதியில்
கலைத்த போதும்

ஏகாதிபத்திய எதிர்பைத்
தாண்டி - விடுதலையைத்
தேடி

இனவாதம் பூத்துக்கிடந்த
பாதைகளை - விலக்கி
ஆணி வேரதனைத்
தேடுகையில்

அந்தச் சிலரின்
அற்ப - அடவடித்தனங்களால்
மீண்டும் -- மீண்டும்
இனவாத விதைகளை
இரத்தக் - கொலைகளை
கறைபடிந்த சில
கரங்கள்
தொடர்வதால்

வரலாற்றில் எழுதப்பட
வேண்டிய விடுதலைப்
போரிற்கு
கறைபடிந்து போன

சிலரின்
செயல்கள்
களங்கம்--
தான்

பாதகமில்லை
நீண்ட தூரம்
தொடர வேண்டிய
யுத்த யாத்திரையில்
உழைத்துப் போன
சிலரின்
அலுத்துப் போன
ஆதரவுகள்
அகன்று போக
இருண்ட வானம்
வெளுத்துப் போகும்

அப்போ
சிரிக்க மறந்த
அந்த தேசத்தினையும்
பூக்க மறந்த
செடிகளையும்
வனப்பு மறந்த
வனங்களையும்
துரத்திய அடிமையிருள்
அகன்று
யுத்த வானத்தின்
சிவந்த
விடுதலை நட்சத்திரம்
வெளிப்பட்டுச் சிரிக்கும்

★ ஈ.டித்துச் சண்

www.padippakam.com



# பேரு நாட்டின் வீரமிகு விடுதலைப் போராட்டம்




உலகின் மேற்குப் பூகோளப்பகுதியில் மிகவும் கொந்தளிப்பான பிராந்தியம் பேரு நாடு தான் என அமெரிக்க ஜம்பவான் பத்திரிகைகள் புலம்பி எழுதும் அளவிற்கு பேரு நாட்டின் விடுதலைப் போராட்டம் உக்கிரம் பெற்றுள்ளது மட்டுமன்றி ஏகாதிபத்திய வாதிகளுக்கு பயமுறுத்தலாகவும் உள்ளது.

இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பேரு நாட்டின் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. 1960ம் ஆண்டின் நடுப்பகுதியில் பேரு கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிகரமான தொரு கட்சியாக புனரமைக்கப்பட்டது. "தோழர் சைக்தேரோ லுமினேஸ்" தலைமையில் இன்று புரட்சிகரப் போராட்டத்திற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலைப்பாட்டின் பின்னரே பேரு நாடு சர்வதேசிய ரீதியாகப் பலரது கவனத்தை ஈர்த்தது. மக்கள் புரட்சிகர சமூக எழுச்சி தான் ஒளிமயமான பாதையாக இன்று பரிணமித்திருக்கின்றது.

பிற்போக்கு வாதிகளும், ஏகாதிபத்திய வாதிகளும் இன்று இங்கு எழுந்துள்ள புரட்சிச் சுவாலையை அணைக்க பரிசுத்த பாப்பரசரை அழைப்பிவைக்கும் அளவுக்குத்தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலத்தீன் அமெரிக்காவில் பசுபிக் கடலின் மேற்கு கரையோரமாக அமைந்திருக்கும் நாடு தான் 'பேரு' இது 'சிலி' நாட்டுக்கு வடக்கே அமைந்துள்ளது. இந்த இரு நாடுகளிலும் தோழர் சேகுவேராவின் போராட்ட கொள்கைகள் பெருமளவில் அமைந்துள்ளன. சிலி நாட்டில் மக்களால் தெரிந்து அனுப்பப்பட்ட பாராளுமன்ற சோஸலிச அரசாங்கம் தோழர் அலென்டேயின் தலைமையில் அமைந்த பொழுது ஏகாதிபத்திய வாதிகள் அதனைப் பொறுக்க மாட்டாது, எதிர்ப்புரட்சியாளர்களைத் தூண்டி விட்டு நாட்டின் நிலைமையையும், பொருளாதாரத்தையும் சீர் கெடச்செய்து, இராணுவ மூலம் அலெண்டேயை சுட்டுக் கொலை செய்து தூக்கிவிட்டனர். பல்லாயிரக்கணக்கான சோஸலிச வாதிகளை சுட்டுக் கொலை செய்தனர்.

இன்று பேரு நாட்டின் ஆயுதம் தாங்கிய நிலையில் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இங்குள்ள போராட்ட முறைகளுக்கு அந்தீஸ் மலைத்தொடர் பெரும் வாய்ப்பான பிரதேசமாக அமைந்துள்ளது. இங்குள்ள சனத்தொகை 1கோடியே 80லட்சமாகும். இதில் 50% வீதமானவர்கள் "குவேஷ்வா" இனத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் அமெரிக்க இந்தியராவர். இங்கு காலனித்துவ, அரைநிலப்பிரப்புத்துவ பொருளாதாரமுறை காணப்படுகின்றது. அமெரிக்கா முதலீட்டாளர்களே 48% வீதமான பொருளாதாரத்தில் தமது முதலீட்டைத் தொடக்கியுள்ளார்கள் இந்நாட்டில் 60% வீதம் வேலையில்லாத்திண்டாட்டம் காணப்படுகின்றது. இத்தகைய நிலைப்பாட்டில் பெருமக்கள் தமது வேலையில்லாப்பிரச்சனையைத் தீர்க்கவும் அந்நிய முதலீட்டாளர்களான அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளை வெளியேற்றவும் பேருநாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு இராணுவ ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டு இங்குள்ள 13மாகாணங்களில் பொலிஸ் ஆயுதப்படைகளினால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இருந்த போதிலும் புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள்

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

படிப்பகம்

www.padippakam.com



# ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் A
# எதிர்ப்புத் தெரிவுக்கும் முகமாக தமிழீழ மாணவ
# எதிர்ப்புப் போராட்டம்.

ஸ்ரீலங்கா பாசிச அரசின் வெளிவிவகார அமைச்சர் A.C.S ஹமீத் 3-3-86 அன்று சுவிஸ் சமஷ்டி பாராளமன்றத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு சுவிசின் நீதி அமைச்சர் திருமதி எலிசபெத் கொப் அவர்களையும் மற்றும் இதர அமைச்சர்களையும் சந்தித்து தமிழ் மக்களுக்கு இலங்கையில் பிரச்சனை இல்லையென்றும் இங்குள்ள தமிழர்கள் பொருளாதார பிரச்சனை காரணமாகவே வந்துள்ளனர் என்றும் சுவிஸ் அரசு தமிழர்களை திருப்பி அனுப்பினால் அங்கு அவர்கள் எந்தவித பிரச்சனைகளுக்கும் உள்ளாக மாட்டார்கள் என்றும் கூறியுள்ளார். A.C.S. ஹமீத்தின் இப்பொய்யான பிரச்சாரத்திற்கு எதிராக தமிழீழத்தில் தமிழ் மக்களுக்கு இனவாத ஸ்ரீலங்கா அரசால் நடத்தப்படும் இன்னல்கள் பற்றியும், தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்ப வேண்டாம் என்றும் சுவிஸ் அரசு இலங்கைக்கு உதவியளிக்க வேண்டாம் என்றும் கூறும் அறிக்கையொன்றை சுவிஸ் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிற்கு தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் மாணவர் அமைப்பான தமிழீழ மாணவர் பேரவை அனுப்பிவைத்தது.

மறு நாள் அதாவது (4-3-86) அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டுக்கு A.C.S ஹமீத்தும் பிரான்சின் இலங்கைத்தூதுவரும் வந்திருந்த சமயம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக தமிழீழ மாணவர் பேரவையால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று சுவிஸ் சமஷ்டி பாராளமன்றத்திற்கு அருகில் நடத்தப்பட்டது. இப்போராட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், ஏகாதிபத்தியத்தின் உளவு படைகளான சி.ஐ.ஏ, மொசாட், எஸ்.ஏ.எஸ் போன்றவற்றிற்கெதிராகவும் சுலோகங்கள் பிடிக்கப்பட்டது. இப்போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.






**Demonstration gegen Sri Lankas Auss**

ul. Rund 35 Tamilen und drei Schweizer steigen nach Aufforderung der Beamten der Stadtpolizei Bern in den bereitgestellten Polizeibus. Vor dem Hotel Bellevue, in dem Abdul C. Shahul Hameed, Aussenminister von Sri Lanka, eine Pressekonferenz gab, protestierten sie gegen dessen Besuch in der Schweiz. Sie warfen der Regierung des Insel-

staates Mensche
gen vor. Die Stad
Demonstranten in
ne ab und nahm
lien auf. Anschlies
lizei wieder alle fr
ter Tamile bestätig
(Bi
Berich

**BZ**→

(BERNER ZEITUNG)

www.padippakam.com



…ஹமீத்தின் சுவிஸ் வருகைக்கு

…ர் பேரவையால் நடத்தப்பட்ட

நம் திகதி பங்குனி மாதம் 1986ம் ஆண்டு பத்திரிகைச் செய்திகள்.



Blick

● Mit Protestplakaten demonstrieren die Tamilen in der Nähe des Bundeshauses.

# Tamilen-Demo bei Bundeshaus

## … weil Bundesrätin Kopp Minister aus Sri Lanka empfing

VON EDGAR R. MINDER

■■■ Während beim Bundeshaus Tamilen auf der Strasse demonstrierten, versicherte gestern Sri Lankas Aussenminister Abdul C. Shahul Hameed, dass Bundesrätin Elisabeth Kopp den Ausschaffungs-Stopp für Tamilen aufheben könne, da diesen bei einer Rückkehr in die Heimat kein Haar gekrümmt werde. **WEITER SEITE 2**

24 heures




**…senminister**

…nrechtsverletzun-
…polizei führte die
… die Polizeikaser-
…lort ihre Persona-
…send liess die Po-
…i, wie ein beteilig-
…te.

…d: Hans Schlegel)

…t Seite 4 (Inland)



**Une trentaine de Tamouls, hostiles au gouvernement du Sri Lanka, qui manifestaient devant l'hôtel où a eu lieu la conférence de presse, se sont fait embarquer.**

Keystone

www.padippakam.com



[5ம் பக்கத்தொடர்ச்சி]

மாணவர்களும் ஆசிரியர்களும் தொழிலாள பாட்டாளி மக்களுமேயாவார்கள். உள்ளூர் அதிகாரவர்க்க வெறியர்களுக்கும் அவர்களது அடிவருடி ஆதரவாளர்களுக்கும் புரட்சிகர கெரில்லா படையினர் விதிக்கும் மரணதண்டனைகளை அரசாங்கம் குற்றம்மெனக் கூறுகிறது. உள்ளூர் நிலப்பிரபுத்துவ அதிகாரத்துவ வாதிகளதும் அரசு பிரதிநிதிகளதும் கெடுபிடிகளையும் கொடுமைகளையும் அகற்றாமல் அடக்கப்படுபவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை சுதந்திரமாகச் செயற்படுத்த முடியாது என புரட்சிப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் அடக்கப்பட்டவர்களும் வறியவர்களும் நீதியான போராட்டத்திற்கு எதிராக, அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் தொடுத்துள்ள எதிர்ப்புரட்சிகரப் போராட்டம் தான் பேரு நாட்டில் நடக்கிறது என்பதை சர்வதேச மன்னிப்புச் சபையே தனது அறிக்கையில் கூறும் அளவிற்கு அங்கு இன்று போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது எனலாம்.

இலங்கை அரசின் நிலையினைப் போன்றே விடுதலைப் போராளிகளை அல்லது புரட்சியாளர்களை அடக்குவதற்கும், இல்லாது ஒழிப்பதற்குமே பேரு அரசாங்கம் ஏகாதிபத்திய வாத நாடுகளிலிருந்து பெருமளவு பண உதவியையும் ஆயுத உதவியையும் பெற்றுவருகின்றது. தென் அமெரிக்காவிலேயே மிகக்கூடுதலான வெளிப்படையான அமெரிக்காவின் இராணுவ பணவுதவியைப் பெற்று வரும் நாடாக பேரு நாடு விளங்குகின்றது. அத்துடன் அமெரிக்காவினதும் அதன் தாஸ நாடுகளினதும் இராணுவ ஆலோசகர்கள் நிரம்பிய நாடாக இருப்பதோடு, இலங்கையின் நிலையினைப் போன்றே இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளினதும் இராணுவ பணவுதவிகளும் வழங்கப்படுகின்றது.

இந் நிலைகளுக்கு மத்தியிலும் பேரு மக்கள் கெரில்லா இராணுவமானது திட்டத்திட்ட இராணுவப்படைப் பிரிவின் அளவுக்கு அமைப்பு ரீதியா வளர்ச்சி பெற்றுள்ளது. அரச ஆயுதப் படைகளை பல இடங்களில் மோதி வென்று கொண்டுள்ளது. மேலும் "அயாகுசோ" என்ற பிரதேசம் கெரில்லாக்களது கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இது மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக பேரு அரசாங்கமும் ஏகாதிபத்திய வாதிகளும் குமுறுகின்றார்கள்.

1985 ஜூலை மாதத்தில் மக்களது திசையினைத் திருப்புமுகமாக ஜனாதிபதி தேர்தலை நடத்தினார்கள். எந்த வேட்பாளரும் அறுதியான பெரும்பான்மை வாக்குகளைப்பெற முடியவில்லை. ஐக்கிய இடதுசாரி முன்னணி வேட்பாளரும் "லீமா" தலைநகர மேயருமான "பாரென்டெஸ்" தனது போட்டியிலிருந்து இறுதி நேரத்தில் விலகிக் கொண்டார். அரசின் உண்மையான வர்க்கத்தன்மையை மறைக்குமுகமாகவும் மக்களின் கவனத்தைத் திருப்புமுகமாகவும் புதிய ஜனாதிபதியாக "அலன் கார்சியா" தெரிவு செய்யப்பட்ட போதிலும் அரசாங்கம் இன்று ஆயுதப்படைகளது தயவில் தான் தங்கியிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

புரட்சியாளர்கள் கிராமம் கிராமமாகச் சென்று மக்களை அணிதிரட்டி தமது போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்றார்கள். அரச இராணுவம் ஹெலிக்கொப்டர் போன்றவற்றில் வந்து பொது மக்களை தாக்குகின்றார்கள். ஆனால் உண்மையான போராளிகளுக்குப் பதிலாக சிறுவர்களையும் கர்ப்பிணிப் பெண்களையும் தாக்கிக் கொன்றுவிட்டு பயங்கரவாதிகளை, புரட்சிகாரர்களை கொன்றுவிட்டதாக அரசு அறிக்கைகளில் தெரிவிக்கின்றார்கள்.

இத்தகைய நிலைப்பாடே இன்று இலங்கையிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எங்கெங்கு புரட்சிகளும் போராட்டமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதோ அங்கு தனது வர்க்க நலனைப் பாதுகாக்க உலகின் அதிபயங்கரவாதத்தைத் தூண்டும் நாடான அமெரிக்காவினதும் இஸ்ரேலினது மொசாட் படையினரும் உதவிக்குச் சென்று விடுகின்றார்கள்.

வியட்நாம் மக்களது வீரமிகு போராட்டத்துக்கு முகம் கொடுக்க முடியாது தோல்வியைத் தழுவிக் கொண்ட அமெரிக்கா இன்று எல் சல்வடோரில், நிக்கரகுவாவில், இலங்கையில், அங்கோலாவில் பேரு நாட்டில் போராளிகளுக்கு எதிராக தனது சகல பண, இராணுவ உதவிகளை வழங்கி அந்த நாட்டில் பெரும் குழப்ப நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு "சனநாயகப் பாதுகாவலன்" என தங்களைத் தாங்களே நாமகரணஞ் சூட்டிக் கொள்ளுகின்றார்கள்

பேரு மக்களது புரட்சிகரமான போராட்டம் நடைபெறும் இக் காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிருடனேயே எரித்துக் கொல்லப்படுகின்றார்கள். அரச இராணுவத்தின் அட்டூழிய நிலை தொடரந்தொடர மக்களும் புரட்சிகர வீர உணர்வு பெற்று புரட்சிகரப்போராளிகளோடு சேர்ந்து தமது பங்களிப்பைச்செய்ய முன்வந்துள்ளார்கள். வெகு விரைவில் முதலாளித்துவ வாதிகளும் அதன் ஒத்து ஊதிகளும் தூக்கியெறியப்பட்டு அனைத்து பேரு மக்களது புரட்சிகர சோஷலிச அரசாங்கம் அமையும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இன்று சர்வதேச ஆதரவுடன் பேரு நாட்டு விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. மக்கள் புரட்சி வெல்வது உறுதி.

- சரவணமகேந்திரன் -

படிப்பகம்

www.padippakam.com



# ஓர் இதயத்தின் ஏக்கக் குரல்

என் அன்பார்ந்த மக்களே இன்று துப்பாக்கி ஏந்தியவர்களைப்பார்த்து ஏன் துப்பாக்கி தூக்கினீர்கள் என்ற கேள்வியைக்கேட்காமல் அவர்களின் துப்பாக்கியைப் பழுது பார்ப்பதற்கு எண்ணெயை கொடுப்பீர்களானால் நாளை அதே துப்பாக்கி முன் யாரும் மற்ற அறைதைகளைப் போல் பலியாடுகளாக நிற்க வேண்டிய நிலை ஏற்படும். அன்று பழுதான துப்பாக்கிகளுக்கு எண்ணெய் கேட்கமாட்டார்கள். உங்களிடமிருந்து இரத்தம் கேட்பார்கள். அப்போது நீங்கள் மறுக்க முடியாது. காரணம் இன்று துப்பாக்கியையும் போராட்டத்தையும் நீங்கள் கையில் எடுக்காததே.

வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்களே வெற்றியையும் நாளைய ஆட்சியையும் மக்களே தீர்மானிப்பவர்கள். மறந்து விடாதீர்கள். மறந்தால் தமிழ் ஈழம் என்ற சவக்குழி உங்களுக்காகக் காத்திருக்கும்.

தனிப்பட்ட மனிதர்களின் வீரவிளையாட்டுக்களாலோ அல்லது தனி ஒரு குழுவாலோ ஒரு புரட்சிகர நாட்டை உருவாக்க முடியாது அப்படி வரலாறுமில்லை.

ஒரு நீண்ட கால மக்கள் போராட்டத்தின் மூலமே சீர் கெட்ட சமுதாயத்தின் சிக்கல்களையும் முதலாளித்துவத்தின் முதுகெலும்பையும் உடைத்து ஒரு பொதுவுடமைச் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இன்று ஆயுதம் தூக்கிய சிலரின் அடாவடித்தனங்களின் ஊடாக எதிர்காலத் தமிழீழத்தைப் பார்க்கும் ஓர் இதயத்தின் ஏக்கக் குரல்.

- நாகநாதன் -

> "ஓடப்பர் ஆயிருக்கும் ஏழையப்பர்
> உதையப்பர் ஆகிவிட்டால் - ஓர்நொடிக்குள்
> ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
> ஒப்பப்பர் ஆகிடுவர் உணரப்பா நீ"
>
> - புரட்சிக்கவி பாரதிதாசன் -

# புத்துலகம் கண்டிடுவோம்

ஈழத்துத்தமிழ் மக்கள் கனவான
"தமிழீழம்" அடைந்திட
தோழர்களே நம் இயக்கம்
அனைத்தும் ஒன்றுபட்டு இயங்கிடின்
நம் தொல்லைகள், அல்லல்கள்
அனைத்தும் நீங்கிடும்.

சிங்கள நாட்டின் ஏழைப் பாட்டாளிகள்
பாமர விவசாய தொழிலாளர்கள்
என்றும் எம் பாதையில் எதிரிகளல்லர்
எள்ளளவும் எமக்குள்ளே பகையுமில்லை
புரிந்துணர்வு கொண்டு நாம்
புதுப் பாதை வகுத்திடுவோம்.

எமக்குப்பகைவர் ஏகாதிபத்தியமும்
உள்ளூர்த் தேசிய, தரகு முதலாளிகளும்
இனவாதம் கிளப்பி விட்டு
தங்கள் நலம் பேணும் அரசியல்வாதி
- களுமே

நம் தோழர்கள் தூக்குகின்ற துப்பாக்கித் தோட்டாக்கள் அனைத்தும்
எதிரியின் படைகளையே
தாக்குகின்ற நிலை வேண்டும்
எமக்குள்ளே வேறுபட்டு
பொருதுகின்ற நிலை வேண்டாம்
ஒற்றுமையினை குலைக்கின்ற
நிலையும் எமக்குள் வேண்டாம்.

சாதியினை, பெண் அடிமைதனை
அறவே நீக்கி
மூடக்கொள்கை தனை முடமாக்கி
அடி மட்ட மக்கள் அனைவரையும்
அரசியல் மயமாக்கி, அணிதிரட்டி
ஒன்றுபட்ட நிலை தன்னை உருவாக்கி
தமிழீழ மக்களது துயர் போக்க
துப்பாக்கி தனை ஏந்தி ....

சோஷலிச நாடுகளின் துணைகொண்டு
பொதுவுடமை சமுதாயம் தனை அமைத்து
புத்துலகம் கண்டிடுவோம்.
தனித் தமிழீழம் அமைத்திடுவோம்.

- தோழர் முத்து மகேந்திரன் -

www.padippakam.com



# கரையைத் தேடும் ஓடங்கள்



## அத்தியாயம் - 4
(ஈழத்துச் சுண்)

அன்று அக்காலை படகுடன் கரையொதுங்கிய மூன்று தோழர்களின் சடலங்களையும் இரகசியமான முறையில் அடக்கம் செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. படகில் வந்த மற்றைய மூன்று தோழர்களும் பற்றி எதுவித விபரமும் தெரியாமலிருந்தது. அவர்களைத் தேடும் பொறுப்பை வேறு சில தோழர்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர். எதிர்பாராதவிதமாக நடந்த இந்த இழப்பு கறுப்பனுக்கு மட்டுமல்லாது மற்றைய தோழர்களுக்கும் மிகவும் கவலையை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் ஒரு விடுதலைப் போராட்டத்தில் இவைகள் எல்லாம் வழமையென்பதால் அவர்கள் மனம் சற்று ஆறுதலடைந்தது.

"ஒரு பாரிய மக்கள் போராட்டத்தில் இப்படியான இழப்புக்கள் சகசமானவைதான். இப்படியான இழப்புகள் ஏற்பட ஏற்படதான் எமது விடுதலைப் போராட்டம் சரியானதொரு மக்கள் போராட்டமாக பரிணமிக்கும். இன்று நமது சக தோழர்களான பாண்டியன், சுதா, செந்திலுக்கு நேர்ந்த கதி நாளை நமக்கும் வரலாம். இதனை நாம் எப்பொழுதுமே எதிர்பார்த்துக் கொண்டது தான். எமது மண்ணின் விடுதலையை எந்தளவுக்கு நேசிக்கின்றோமோ அந்தளவிற்கு ஏகாதிபத்தியத்தை உடைத்தெறிந்து அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது எம் போன்ற தமிழீழ இளம் சமுதாயத்திற்கு வாய்த்திருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி ஒரு வியட்நாமிய போராட்டம் போன்று ஒரு நிக்கரகுவா விடுதலைப்போராட்டம் போன்று எமது விடுதலைப் போராட்டமும் வெற்றி பெற்று அடக்குமுறைகளற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க என்றோ ஒரு நாள் இறக்கப்போகும் நாம் இன்றும் இறக்கலாம்" கறுப்பன் கூறிய அறிவுரைகளைத் தொடர்ந்து தோழர்கள் யாவரும் தமக்குரிய அன்றைய கடமைகளைச் செய்யச் சென்றனர்.

தோழர்களின் உயிரற்ற உடல்கள் கறுப்பனின் கண்முன் பரிதாபமாக கிடந்தன. இடையிடையே கடலில் கொந்தளித்து எழுந்த அலைகள் கரையில் மலையாக கிடந்த அந்த தோழர்களின் உடல்களை அடிக்கடி எட்டிப்பார்த்துக் கொண்டன. கறுப்பனின் நினைவில் அன்று பாண்டியனுடன் பழகிய முதல்நாள் நினைவுகள் தோன்றி மறைந்து கொண்டன.

முதல் முறை பாண்டியனை மாதகலில் சந்தித்த போது அவனுக்கிருந்த விடுதலையுணர்வு காரணமாக கறுப்பன் மூலம்தான் இயக்கத்தில் தன்னை சேர்த்துக் கொண்டான். சிறு வயதிலிருந்து கடற்றொழில் செய்து வந்தமையாலும் கடற்பரப்பில் கிடைத்த பல்வேறு அனுபவங்களாலும் அவனது படகோட்டும் திறமை காரணமாகவும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் வாரத்திற்கு இருதடவைகள் பயணம் செய்வதன் மூலம் கழகத்திற்கு ஒரு உண்மைத் தொண்டனாகவும் சிறந்த விடுதலை வீரனாகவும் விளங்கினான்.

சிங்கள இனவாத அரசினால் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட எண்பத்தியோராம் எண்பத்தி மூன்றாம் இனக்கலவரங்களின் போது யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுத்து தமிழ் மக்களுக்காக கிராமம் கிராமமாகச் சென்று நிதியும் உடையும், உணவுப் பொருட்களும் சேகரித்துப் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்கியதன் மூலம் தமிழீழ விடுதலைக்கும், தமிழ் சமுதாயத்திற்காக தன்னை அர்ப்பணித்த பாண்டியன் இன்று விடுதலைக்கு உரமாகிவிட்டான்.

டிக்--டிக்--டிக் என்று மூன்று முறை நச்சரித்து பல்லியொன்று அவனைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டது.

ஜோசப், நிசார் இருவருமாக தோழர்களின் உடல்களைத் தகனம் செய்வதற்கு தேவையான விறகுகளைத் தேடி கடைகடையாக அலைந்து ஒரு மரக்காலையில் கிடந்த பச்சை விறகினை வாங்கிக் கொண்டு குறுக்குப் பாதைகளால் ஆனைக்கோட்டையூடாகச் செம்மணிச் சுடலையை அடைந்து தகனங்களிற்கான ஆயத்தங்களைச் செய்து முடிக்க குறிப்பிட்டபடி கறுப்பன், சுந்தரம், சின்னவன் மூவரும் தோழர்களின் சடலங்களை வானில் ஏற்றிக் கொண்டு அங்கு வரவும் சரியாக இருந்தது.

அவசரஅவசரமாக சடலங்களை வானிலிருந்து இறக்கி ஏற்கனவே தயாராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகுக் கட்டைகள் மேல் வைத்தபோது அவர்கள் கண்களிலிருந்து அவர்களையறியாமலேயே கண்ணீர்த்துளிகள் சிதறின.

படிப்பகம்

பரந்த ஆலமரங்கள் நிறைந்த அந்தச் சுடுகாட்டினூடாக வீசிய காற்று இந்த வீரர்களுக்காக வென்று அழுது கொண்டிருந்தது. சாய்ந்திருந்த மரங்கள் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது போன்று வீசிய காற்றுடன் சேர்ந்து கிளைகளை உதிர்த்துக் கொண்டது.

"பச்சை விறகு எண்டதாலை மூன்று டயரும் கொண்டுவந்திருக்கிறம்" கையிலிருந்த டயர்களை விறகுக் கட்டைகள் மேல் வைத்தபடி கூறினான் நிசார்.

எண்ணுக் கணக்கில்லாது துப்பாக்கிச் சன்னங்கள் பட்டதால் சிதைந்திருந்த அவர்களது உடல்கள் எந்தவித சமய ஆசாரமுமின்றி, மக்கள் கூட்டமுமின்றி விறகுக் கட்டைகள் மேல் பஞ்சாகக் கிடந்தன. நேற்றுக் கடமை செய்ய உயிரை வெறுத்துப் புறப்பட்டவர்கள் இப்போ உயிரை விடுத்து உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில நிமிடங்களில் இவர்களது உடல்கள் தீயினால் வெந்து ஒருபிடி சாம்பலாகும். இவர்கள் விடுதலைக்காக செய்த தியாகங்கள் எம்மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

"அடுத்த இதழில் முடிவடையும்"

# தமிழீழச் செய்திகள்

## முல்லைத்தீவில் இராணுவ வெறியாட்டம்

கடந்த மாதம் கிளிநொச்சிப் பகுதியிலும் முல்லைத்தீவிலும் நடைபெற்ற சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதிகளில் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதிகள் தோறும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களும் நடைபெற்றுள்ளன. சிறீலங்கா முப்படையினர்களினதும் மிலேச்சத்தனங்களால். 3/2/86 அன்று பன்குளம் பகுதியில் 30 தமிழர்கள் கொல்லப்பட்டும் 10 பேர் காயமடைந்துமுள்ளனர்.

## வள்ளத்தில் சென்றவர்கள் மீது குண்டுவீச்சு

1/2/86 அன்று முல்லைத்தீவுக் கடலில் இரு வள்ளங்களில் சென்றவர் மீது குண்டு வீசி இராணுவம் தாக்கியதில் வள்ளத்தில் வந்த இருபது தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மறு வள்ளம் பற்றிய தகவல் தெரியவில்லை.

## ஹெலிக்கொப்டர் மீது தாக்குதல்

கல்மடுவில் நான்கு நாட்களாக புதைந்திருந்த இராணுவ வாகனங்கள் மீட்கப்பட்டு முகாமுக்கு கொண்டுவரும் வழியில் கண்ணிவெடிக்கு உள்ளாகி இரு கவசவாகனங்கள் சேதமாகியதுடன் ஒரு ஹெலிக்கொப்டரும் போராளிகளின் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளது. இப்பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு 100க்குமேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 50 பேர் வரையில் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

## மலையகத்தில் அசம்பாவிதங்கள்

மலைநாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தலாவாக் கொல்லையில் இரண்டு புகையிரத நிலையங்களும் இரு வீடுகளும் இனந்தெரியாத நபர்களினால் தீவைத்து கொழுத்தப்பட்டுள்ளது. கற்றனில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமும் சிங்களக்குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளதுடன் 50 வீடுகள் வரை தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளதுடன் 50க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுமுள்ளார்கள்.

## இராணுவ முகாங்களில் குழப்பம்.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் ஓசீன இராணுவ மேஜர் ஒருவர் இராணுவத்தாலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். திருகோணமலை, தம்பலகாமம் இராணுவ முகாங்களிலும் இராணுவத்தினருக்கிடையில் ஏற்பட்ட மோதல்களையடுத்து மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

## ஹெலிக்கொப்டரில் இருந்து குண்டுவீச்சு

கடந்த மாதம் இறுதியில், தாவடி, மானிப்பாய், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் மூன்று தினங்களாக ஹெலிக்கொப்டரில் இருந்து இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பலர் கொல்லப்பட்டும் 100க்கு மேற்பட்டோர் காயமடைந்தும் பலவீடுகள் சேதமாகியும் உள்ளன.

## திருமலையில் இராணுவமுகாம் விஸ்தரிப்பு

திருமலையில் ஒவ்வொரு 6 கிலோமீட்டருக்கு ஒரு இராணுவமுகாம் என்ற வீதத்தில் இராணுவ முகாம்கள் உருவாக்கப்படவுள்ளதாக இலங்கை அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

www.padippakam.com



## திருமலையில் சிங்களவர் மீது தாக்குதல்கள்

19-2-86 திருமலைப் பகுதியில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதல்களில் நான்கு இராணுவத்தினரும் 39 சிங்கள மக்களும் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவிக்கிறது. மேற்படி சிங்களவர்கள் தமிழீழ பிரதேசத்தில் அரசாங்கத்தினால் திட்டமிட்ட குடியேற்றத்திற்காகக் கொண்டுவரப்பட்டவர்கள் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலைச் சம்பவத்தையடுத்து யாழ், சுன்னாகம், தாவடி, கொக்குவில், சுதுமலை, கோண்டாவில், கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்களில் இராணுவத்தினர் ஹெலிக்கொப்டரிலிருந்து தாக்கியதில் 50 பேர் வரை கொல்லப்பட்டதாக எதிர்பார்க்கப்பட்டாலும் 3 குழந்தைகள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டும் வீடுகள், கட்டிடங்கள் என்பன சேதமாகியுமுள்ளன.

## அம்பாறையில் இராணுவ வெறியாட்டம்.

திருமலையில் சிங்கள மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அம்பாறைப் பகுதியில் வயலில் வேலைசெய்துகொண்டிருந்த 103 தமிழர்களை ஸ்ரீலங்கா இராணுவம் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இதில் பெண்களும் சிறுவர்களும் அடங்குவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சிக்கு இரண்டு தினங்களுக்கு முன்பு அம்பாறையில் கிராமமொன்றை முற்றுகையிட்ட இராணுவத்தினர் 50 அப்பாவி தமிழ் மக்களை சுட்டுக் கொன்றுள்ளதுடன் பல பெண்களையும் மானபங்கப்படுத்தியுமுள்ளனர்.


## சிங்கள இளைஞர்கள் கைது.

அண்மைக்காலங்களாக இலங்கை அரசு தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்வதுடன் நின்றுவிடாது சிங்கள இளைஞர்கள் சிலரையும் மார்க்சிய பயங்கரவாதிகளுக்கு உதவி செய்வதாகக் கூறிக் கைது செய்துள்ளதுடன் தென்பகுதியில் புரட்சியொன்று தோன்றக் கூடிய சூழ்நிலை இருப்பதனையும் உணர ஆரம்பித்துள்ளது.

## அமெரிக்கா கண்டனம்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இலங்கையில் அதிகளவில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றது எனவும், தமிழர்கள் பாரபட்சமான முறையில் சித்திரவதைகள் செய்து கொல்லப்படுவதாகவும் செய்தி தெரிவிக்கின்றது.

வெளியீடு: தமிழீழ தகவல் நடுவம் சுவிற்சலாந்து.




பெறுநர்:-

அனுப்புவோர்:-

THAMILEELAM INFORMATION BUREAU
PAPIERMUHLESTR.134
3063 ITTIGEN
SWITZERLAND
Tel. 031/58 83 51

குரல்கள்! குரல்கள்! குரல்கள்!

நாம் சாதாரண மன உணர்வுக்கு இடம் அளித்துவிட்டாலோ, அன்றி நிலைமையை நிதானமாக எடை போட்டுப் பார்க்காமல் சிவப்புக் கொடிகளை அசைப்பதற்கு இடங்கொடுத்து விட்டாலோ அன்றி ஆதாரமற்ற போலித்தனமான புரட்சிகர வாய்ச்சவடாலினால் ஈர்க்கப்பட்டு அதிதீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ நாம் சீர்ப்படுத்த முடியாத தவறுகளை செய்து விடுவோம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இளைஞர்களுக்கு
''லெனின்''

படிப்பகம்